DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 43/2021

Prosecution witness – PW.2

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.நாகராஜன் | Caste: | |
| Father's Name | : வாழவந்தான் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

11.07.2025 – 11.55 AM

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் சின்ன உடப்பங்குளம் கிராமத்தில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் கோட்டைச்சாமி எனது அக்காவின் மகன். அவர் தற்போது வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார். எதிரி உள்ளூர்காரர் என்ற முறையில் தெரியும். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. சுமார் 4, 5 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் மாலை 03.00 மணி முதல் 04.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது கோட்டைச்சாமியின் பக்கத்து வீட்டுக்காரர்கள் கோட்டைச்சாமியை கருப்பையா மகன் வீரமருது அடிப்பதாக சொன்னார்கள். நான் உடனே சென்று பார்த்தபோது வீரமருது கோட்டைச்சாமியின் சட்டையை பிடித்து அவரது முகத்தில் கையால் குத்திக் கொண்டிருந்தார்.

2. நான் சென்று விலக்கிவிட்டபோது எனது வலது கையை வீரமருது கடித்துவிட்டார். வீரமருது கடித்து வைத்ததில் அவரது பல்அச்சு எனது கையில் பதிந்து விட்டது. பின்னர் அருகிலிருந்த மோகனா என்பவரும் வந்து சண்டையை விலக்கிவிட்டார். அவரையும் எதிரி கீழே தள்ளிவிட்டார். சம்பவத்தை பார்த்து அருகில் வசிப்பவர்கள் எதிரியை சத்தம் போட்டு விலக்கிவிட்டார்கள். எனக்கு சிறிய காயம் என்பதால் மண்டலமாணிக்கத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சென்று ஊசி போட்டுக் கொண்டேன்.

நடந்த சம்பவத்திற்கு எதிரி மீது கோட்டைச்சாமி புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– இல்லை.

(ஒம்./–திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.